உ

சிவமயம்



# திருமதி சின்னையா இலக்குமி அம்மா

அவர்களின்

சிவசாருப்பிய நினைவு குறித்த

# அஞ்சலி மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கரவையம்பதி வாசரும்

*இளைப்பாறிய தலைமையாசிரியர்*

அமரர் சின்னத்தம்பியார் ஏரம்பு சின்னையா

அவர்களின்

**அன்புசால் தர்மபத்தினியுமான**

**சைவசீலி**

திருவாட்டி

# இலக்குமி அம்மா

*(இளைப்பாறிய தலைமை ஆசிரியை)*

அவர்களின்

*சிவசாரூப்பிய நினைவு குறித்த*

# அஞ்சலி மலர்

**10. 04. 1996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி சின்னையா இலக்குமி அம்மா
## அவர்கள்

**அன்னை மடியில்** **சிவன் அடியில்**
***20. 03. 1904*** ***29. 03. 1996***



### திதி நிர்ணய வெண்பா

தங்கும் யுவவருஷம் தண்ணொளிசேர் பூர்வபக்கப்
பங்குனியே காதசியில் பற்றறுத்தே - சங்கரனார்
மேவும் மலர்ப்பதத்தை மேவினளே இலக்குமியம்
மாவும் உலகை மறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



உருகும் அடியார் அள்ளூற
உள்ளே ஊறும் தேன்வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே வருக புலன்வழிபோய்த்
திருகு முளத்தார் நினைவினுக்குச்
சேயாய் வருக எனையாண்ட
செல்வா வருக உமையீன்ற
சிறுவா வருக இருவிழியாற்
பருகும் அமுதே வருக உயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே வருக நறும்
பாகே வருக வரைகிழித்த
முருக வேட்கு முன்னுதித்த
முதல்வா வருக வருகவே
மூரிக்கலசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே.

*- மாதவச் சிவஞானமுனிவர்*
*(செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவைப் பிராட்டியார்

அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி யென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தி னிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக ! விரை கழல் சரணே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

### திருவலிவலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### திருப்பிரமபுரம்

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

### திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வ மல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

### திருவண்ணாமலை

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

### திருத்தோணிபுரம்

சிறையாரு மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சிராப்பள்ளி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

## பொது

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.

## திருவையாறு

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவை யாறே.

## திருச்சாய்க்காடு

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

## திருக்கோணமலை

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

## பொது

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழம்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியொடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொ ளாலைவிளை செந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

## திருவலஞ்சுழி

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

## திருக்கேதீச்சரம்

விருது குன்றமா மேருவில் நாணர வாவனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவாவடுதுறை

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே.

### திருப்பிரமபுரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபு ரத்தை உகந்தனையே.

திருச்சிற்றம்பலம்

# தேவாரம்

## திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

### சிதம்பரம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்திசெய்கேன் என்னை நீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்றன் திருக்குறிப்பே.

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே.

### திருப்புள்ளிருக்கு வேளூர்

பேராயிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

### திருவையாறு

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாங் கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயன்ஐ யாற னாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

### திருவானைக்கா

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண் டங் கொண்டடியேன் என்செய் கேனே.

### திருவாவடுதுறை

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

### திருவாரூர்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்பூவணம்

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

### திருஅதிகை வீரட்டானம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்

# தேவாரம்

## சுந்தரமூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்

### திருவெண்ணெய்நல்லூர்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்புன்கூர்

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்தன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.

### திருப்புகலூர்

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

### திருப்பாண்டிக் கொடுமுடி

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே.

### திருநொடித்தான்மலை

தானெனை முன்படைத்தான்
அதறிந்துதன் பொன்னடிக்கே
நானெனப் பாடலந்தோ
நாயி னேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள
மத்த யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான்
நொடித் தான்மலை உத்தமனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவாசகம்

## *மாணிக்கவாசக சுவாமிகள்*

## சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராயச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்

## தில்லை

*திருச்சிற்றம்பலம்*

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுஞ் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்து நாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர்முக்கண்அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகெ லாம்உரல் போதாதென்றே
கலக்கஅடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வானநாடர்
    மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
    அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
    போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
    பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
    வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
    எம் பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
    தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
    பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம் பொலிப்பத்
    தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
    சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
    கற்றைச் சடை முடியான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
    பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
    நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
    சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
    கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
    பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

*திருச்சிற்றம்பலம்.*

## கோயில் திருப்பதிகம்

### தில்லை

*திருச்சிற்றம்பலம்*

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைசனே அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. 3

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா வுயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 4

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே. 5

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியும் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருனை அறியகிற் பாரே. 7

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற (வு) எனக்கிங்கு ஆரயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதீ 8

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 9

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யானிதற் கிலன்ஓர்கைம் மாறே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

## திருமாளிகைத்தேவர்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## சேந்தனார்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## கருவூர்த் தேவர்

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல (கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

### சேந்தனார்

மன்னுக தில்லை! வளர்கநம்
　　பத்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
　　புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
　　அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
　　பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண் டசுரு திப்பொருள்
　　சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்!
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
　　தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
　　மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
　　தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீருந் திருவும் பொலியச்
　　சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
　　பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்?
ஊரும் உலகுங் கழற
　　உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
　　பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

### திருமூலர்

எங்குந் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதத் திருவந்தாதி

***காரைக்காலம்மையார்***

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப் பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

# திருத்தொண்டர் புராணம்

***சேக்கிழார்***

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்;
நிலவு லாவிய நீர்மலி வேணியன்;
அலகில் சோதியன்; அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

''தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம்'' என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அபிராமியம்மை
## பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும்ஓர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்ஒரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 1

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண் டலம்நுதற்
கத்தூரிப் பொட்டும் இட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழி யும்சிறிய
கொவ்வையின் கனி அதரமும்
குமிழனைய நாசியும் குந்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே;
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாழ்வைத் துறந்து
மைக்கயலை வேண்டி நின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளன்றோ,
செகமுழுது மொற்றைத் தனிக்குடை கவித்துமேற்
சிங்கா தனத்தில் உற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்றுமிகு
திகிரி உலகு ஆண்டு பின்பு
புகர்முகத்(து) ஐரா வதப்பாக ராகிநிறை
புத்தேளிர் வந்து போற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்!
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 3

மறிகடல்கள் ஏழையும் திகிரிஇரு நான்கையும்
மாதிரக் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையும் ஓர்
பொறியரவு தாங்கிவரு புவனம் ஈரேழையும்
புத்தேளிர் கூட்டத்தையும்
பூமகளை யும்திகிரி மாயவனையும் அரையில்
புலியாடை உடையானையும்
முறைமுறைக ளாயீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்;
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத்(து) ஓங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியிலே நின்ன தன்பெனும் சிறகால்
வருந்தாம லேஅ ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லானசீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொடுத்து
நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய்
நின்உதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங்க ளுக்கன்னை என்றோதும்:
நீலியென்(று) ஓது வாரோ?
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 5

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும் அன்று உற்பவத்திடு
பையுறு சீவனுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தினுக்கும்
மற்றுமொரு மூவர்க்கும் யாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லாமலே
நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்தும்மிகு
நவநிதி உனக்கிருந்தும்
நானொருவன் வறுமையில் சிறியனா னால்அந்
நகைப் புனக்கே அல்லவோ?
அல்கலந் தும்பர் நாடளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடுல கங்களுக் காதார மாய்நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனை வியாய்இ ருந்தும்
வீடுவீ டுகள்தோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலச்சையும்போய்
வெண்துகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
உன்மத்த னாகி அம்மா
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்றதுஏது சொல்வாய்:
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 7

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்போய்
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்(டு)
ஈனந் தனைத்தள்ளி எனதுநான் எனுமானம்
இல்லாம லேதுரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்துநெஞ்(சு)
இருளற விளக்கேற்றியே
ஆனந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போதிலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்றது என்று காண்!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயாகி னால்எ னக்குத்
தாயல்ல வோ யான்உன் மைந்தனன்றோ எனது
சஞ்சலம்தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முன்தானையால் துடைத்து
மொழிகின்ற மழலைக்கு கந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றருகில் யான்
குலவிவிளை யாடல்கொண் டருள்மழை பொழிந்(து) அங்கை
கொட்டிவா என்(று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந்த னுக்(கு) இளையன் என்றென்னைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலி லேதோன்றும் ஆறாத அமுதமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 9

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்:
கண்போதி னாலுன் முகப்போது தன்னையான்
கண்டு தரிசனை புரிகிலேன்
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன்ஆல யத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்;
மோசமே போய் உழன்றேன்;
மைப்போத கத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறியே
மாகோர காலன் வரும்போது தமியனேன்
மனங்கலங் கித்தி யங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்;
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகையும் துரத்தவெம் பிணியும் துரத்த
வெகுளியா னதும் துரத்த
மிடியும் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களும்துரத்த
பகையும் துரத்தவஞ் சனையும்துரத்தப்
பசியென் பதும்துரத்தப்
பாவம் துரத்த பதிமோகம் துரத்தப்
பலகா ரியம் துரத்த
நகையும் துரத்தஊழ் வினையும் துரத்த
நாளும் துரத்த வெகுவாய்
நாவறண் டோடிகால் தளர்ந்திடும் என்றனை
நமனும் துரத்துவானோ?
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 11

## மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துதைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

- குமரகுருபரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அருணகிரிநாத சுவாமிகள் அருளிய*

# திருப்புகழ்

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா
மதுரவாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணம்நாறும்
மார்தங்கு தாரைதந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நான்என்று மார்தட்டும் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரமும் ஆகி அதிபனும் ஆகி
அதிகமும் ஆகி அகமாகி
அயன்என ஆகி அரிஎன ஆகி
அரன்என ஆகி அவர்மேலாய்
இகரமும் ஆகி எவைகளும் ஆகி
இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமுன் ஓடி வரவேணும்
மகபதி ஆகி மவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனம் உறை வேடன் அருளிய பூஜை
மகிழ்கதிர் காமம் உடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமிஎன ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே.

அபசார நிந்தைபட்டு உழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்து அருள் பெறுவேனோ
இபமாமு கன்தனக்கு இளையோனே
இமவான்ம டந்தைஉத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

வசனமிகவேற்றி மறவாதே
மனது துயராற்றில் உழலாதே
இசைபயில் சடாக்ஷர மதாலே
இகபரசௌ பாக்கியம் அருள்வாயே
பசுபதிசி வாக்யம் உணர்வோனே
பழநி மலை வீற்று அருளும் வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

# திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா

(வெண்பா 77-122)

திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப - விரிபுவனம்

எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொற்கரத்தால் - அங்கண்

எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் - அடுத்ததொரு

பூதத் தலைவகொடு போதிஎனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்ப - போதொருசற்று

அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திருஉருவாய் - முன்னர்

அறுமீன் முலையுண்டு அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன் - குறுமுறுவல்

கன்னியொடும் சென்று அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும் - தன்னிரண்டு

கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச் - செய்ய

முகத்தில் அணைத்து உச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்து அளித்துச் - சகத்தளந்த

வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில் அளித்து
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே - கிள்ளைமொழி

மங்கை சிலம்பின் மணிஒன்ப தில்தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து - தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு - நெருப்பிலுதித்து

அங்கண் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கண் கிடாஅதனைச் சென்றுகொணர்ந்து - எங்கோன்

விடுக்குதி என்றுஉய்ப்ப அதன் மீதிவர்ந்து எண்திக்கும்
நடத்தி விளையாடும் நாதா - படைப்போன்

அகந்தை உரைப்புமறை ஆதி எழுத்தென்று
உகந்த பிரணவத்தின் உண்மை - புகன்றிலையால்

சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே - மட்டவிழும்

பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே - கொன்னெடுவேல்

தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீரவடி வேல் விடுத்தோனே - சீரலைவாய்த்

தெள்ளு திரை கொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றிருந்து - வெள்ளைக்

கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்குஇமையோர்வாழச் - சயேந்திரனாம்

சூரனைச் சோதித்துவரு கென்று தடம் தோள்விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே - காரவுணன்

வானவரை விட்டு வணங்காமை யால் கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப் - பானு

பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய் - சகமுடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்தநெடும்
சூருடலம் கீண்ட சுடர் வேலோய் - போரவுணன்

அங்கம் இரு கூறாய் அடன்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும் - அங்கவற்றுள்

சீறும்அர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே - மாறிவரு

சேவல் பகையைத் திறல்சேர் பதாதைஎன
மேவத் தனித்துயர்த்த மேலோனே - மூவர்

குறைமுடித்து விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட்கொண்ட தேவே - மறைமுடிவாம்

சைவக்கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றை மணம்செய்தோனே - பொய்விரவு

காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப் - பூமருவு

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து - மேன்மைபெறத்

தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே - உள்ளம்உவந்து

ஆறுதிருப் பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தைகுடி கொண்டோனே - நாறுமலர்க்

கந்திப் பொதும்பர்எழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே - சந்ததமும்

பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் - பல்கோடி

பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும்அடல்
பூதமும் தீ நீரும் பொருபடையும் - தீது அகலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்விடமும் துட்ட மிருகமுதலாம் எவையும்
எவ்விடமும் வந்து எம்மை எதிர்ந்தாலும் - அவ்விடத்தில்

பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் - கச்சைத்

திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்

சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்திடுக்கண்

எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாசமாக உளத்திருந்து - பல்விதமாம்

ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும் இயல் பல்காப் பியத் தொகையும் - ஓசை

எழுத்துமுத லாம்ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - ஒழுக்கமுடன்

இம்மைப் பிறப்பில் இருவா தனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்து

ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அருணகிரிநாத சுவாமிகள் அருளிய*

## கந்தரலங்காரம்

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்; மரிப் பார்வெறுங் கர்மிகளே.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

மைவருங் கண்டத்தர் மைந்தகந்தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறியேன் கற்ற கல்வியும்போய்
பைவரும் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அருணகிரிநாத சுவாமிகள் அருளிய*

# கந்தரநுபூதி

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே.

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே.

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே.

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறுவே லவனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

*" உபாத்தியாயன் தசாசார்யா*
*ஆசார்யானாம் சதம்பிதா*
*ஸகஸ் ரந்து பித்ரன்மாதா*
*கௌரவேணத் ருச்யதே"*

*- மனுதர்ம சாஸ்திரம்*

உபாத்தியாயனை விட
10 மடங்கு அதிகம்
மதிப்பிற்கும் மரியாதைக்கும் பெருமைக்கும்
உரியவன் ஆசாரியன்.

ஆசாரியனை விட
100 மடங்கு அதிகம்
மதிப்புக்கும் மரியாதைக்கும் பெருமைக்கும்
உரியவன் பிதா.

பிதாவை விட
1000 மடங்கு அதிகம்
மதிப்புக்கும் மரியாதைக்கும் பெருமைக்கும்
உரியவள் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயன்பு

***வணக்கத்துக்குரிய* திருபானந்தவாரியார் சுவாமிகள்**
***தன்தாயார் திருமதி கனகவல்லி அம்மையார்***
***சமாதி பூஜையில்***
***ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.***

நம்மீது எத்தனையோ பேர்கள் அன்பு செய்கிறார்கள்; தந்தை அன்பு செய்கிறார்; மனைவி அன்பு செய்கின்றாள்; மகன் அன்பு செய்கின்றான்; உடன்பிறந்தார்கள் அன்பு செய்கின்றார்கள்; ஆனால் தாய் செய்கின்ற அன்புதான் தலையாய் அன்பு.

தாயன்புக்கு நிகரானது வேறு எதுவும் கிடையாது. தாய் நம்மை முந்நூறு நாள் சுமந்து அங்கமெலாம் நொந்து பெறுகின்றாள். தன் உதிரத்தைப் பாலாக மாற்றித் தருகின்றாள். கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்க்கின்றாள்.

நமக்கு இரண்டு தாயார் உளர். ஒன்று பெற்றதாய். மற்றொரு தாய் இறைவன். தாய் இந்த உடம்பைப் பெற்றவள். இந்தப் பிறப்புக்கு மட்டும் தாய்.

இறைவன் பிறவிகள் தோறும் நமக்கு உதவுகின்ற தாய். அதனால் இறைவனைத் தாய் என்று கூறுகிறார் ***மாணிக்கவாசகர்.***

*''தாயான செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ''*
*''தாயில் சிறந்த தயாவான தத்துவனே''*

*''எவ்வுயிர்க்குந் தாயானானை''* - ***பெரியபுராணம்***

*''எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ''* - ***கந்தரநுபூதி***

நம் தாயாரைத் தங்க ஊஞ்சலில் வைத்துப் போற்றிப் பாலும் தேனும் ஊட்டி, மலர் மாலை சூட்டி வழிபட்டாலும் தாயார் நம்மை ஒரு நாள் வளர்த்ததற்கு இணையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நியாசம் பெற்ற ஒருவனைக் கண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்காதிருந்தால் தந்தைக்கு நரகம். சந்நியாசம் பெற்ற ஒருவன் தாயாரைக் கண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்கவில்லையானால் அந்த சந்நியாசி நரகத்தை அடைவான்.

பற்றற்ற பரம ஞானியும் தாயாரைப் போற்ற வேண்டும்.

சந்நியாசம் பெற்ற **ஆதிசங்கரரும், பட்டினத்து சுவாமிகளும்** தாயாருக்குத் தகனக்கிரியை செய்தார்கள்.

தாய்தான் சிறந்த தெய்வம். தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள் என்று ***யட்சப்ரச்னை*** கூறுகிறது.

''ஈன்றாளில் என்ன கடவுளும் இல்லை'' என்பது ***நான்மணிக்கடிகை.*** இத்தகைய தாயன்பை அடியிற்கண்ட வரலாறு இனிது விளக்குகின்றது.

வடநாட்டிலே ஓர் அரசனிடம் சமஸ்தான வித்வானாகப் பேரும் புகழும் பெற்றுச் சீரும் சிறப்பும் எய்தி ''ஸ்ரீஹீரன்'' என்பவர் இருந்தார். இவர் வடமொழியில் வல்லவர். இவர் அரச சபையில் சூரியனைப் போல் விளங்கினார். அவருடைய வாக்கின் வளமையைக் கண்டு மன்னன் மகிழ்ந்து அவருக்கு பல விருதுகள் வழங்கினான்.

ஒரு நாள் அயல்நாட்டிலிருந்து ஒரு புலவன் வந்தான். கையில் யாளிமுகத் தோடாவும், வைரக் கடுக்கனும், நவரத்தின மோதிரங்களும், பொற்சரிகைப் போர்வையும் உடைய அப்புலவன் சீடர்கள் பலர்சூழ மிடுக்குடன் தோற்றமளித்தான்.

அப்புலவனுக்கும், ஆஸ்தான வித்துவானாகிய ஸ்ரீஹீரனுக்கும் கல்விப்போர் நிகழ்ந்தது. அதில் ஸ்ரீஹீரன் தோல்வியடைந்தார். அந்த அவமானத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்கு சிந்தாமணிஎன்ற மகாமந்திரம் தெரியும். அம்மந்திரம் சரஸ்வதிக்கு உரியது. அதனைப் பன்னிரு ஆண்டுகள் ஜெபித்தால் கலைமகள் தோன்றிக் காட்சி தருவாள். இல்லையேல் நடுஇரவில் பிணத்தின் மீது அமர்ந்து அச்சம் இன்றி பன்னிரெண்டு நிமிஷம் ஜெபித்தால் கலைமகள் காட்சிதருவாள். அவருக்கு ஸ்ரீஹர்ஷன் என்ற ஒரு சிறிய குழந்தை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மந்திரத்தை அந்தச் சின்னஞ்சிறு பாலகனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று கருதினார். மந்திரத்தை உபதேசிக்கக் கூடிய வயது குழந்தைக்கு இல்லை. தன் மனைவி மாமல்ல தேவிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

''பெண்ணே! சிந்தாமணி என்ற இந்த மந்திரம் மிகச் சிறந்த அருமையும் பெருமையும் உடையது. இதனை நமது மகன் ஸ்ரீஹர்ஷனுக்கு உரிய காலத்தில் நீ உபதேசம் செய். இம்மந்திரத்தை பயபக்தியுடன் பன்னிரண்டு ஆண்டுகள் ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இல்லையேல் நள்ளிரவில் பிணத்தின்மீது அமர்ந்து சிறிதும் அருவருப்பும் அச்சமும் இன்றி பன்னிரண்டு நிமிஷங்கள் ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இது கிடைத்தற்கரிய அரிய பொக்கிஷம். இதனை மகனிடம் ஒப்புவிக்க வேண்டும்'' என்று கூறினார்.

பின்னர் ''மானம் இழந்தபின் வாழாமை முன் இனிது'' என்ற வாக்கின்படி அவர் உயிர் துறந்தார். மனைவி மாமல்லதேவி கணவனாருடைய பிரிவைக் குறித்துப் பெரிதும் வருந்தினாள். மந்திரத்தை மகனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு உயிர்தாங்கிக் கொண்டிருந்தாள்.

சிறிது குழந்தைக்கு வயது வந்தபின் அம்மந்திரத்தைக் குழந்தைக்கு உபதேசித்தாள். அம்மந்திரத்தை சதா உச்சரிக்கும் பயிற்சியை அக்குழந்தைக்குத் தந்தாள். தன் மகன் பன்னிரண்டு ஆண்டுகள் ஜெபித்தால்தானே வாணிதேவியின் தரிசனம் கிடைக்கும்! அத்தனை நாள் தாமதிக்காமல் அதிவிரைவில் அன்னை கலைமகளின் அருளைத் தன் அருமை மகன் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஒரு நாள் இரவு 15 நாழிகை நள்ளிரவு தன் வீட்டுக்கூடத்தில் அவள் மல்லாந்து படுத்துக் கொண்டாள். மகனை மார்புமீது வைத்துக் கொண்டாள். ''கண்ணா உனக்குச் சொன்ன மந்திரத்தை நீ சொல்லிக் கொண்டே இரு. அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் உனக்கு நிரம்ப பட்சணம் தருவேன். விளையாட்டுச்சாமான் வாங்கித் தருவேன்'' என்றாள். அவள் இட்ட திட்டத்தைக் குழந்தை அறியாதுதானே! தாயின் மார்பில் அமர்ந்திருந்த ஸ்ரீஹர்ஷன் மந்திரத்தை இடையறாது ஜெபித்துக் கொண்டிருந்தான்.

தாய் விளக்கை அணைத்தாள். முன்னமேயே படுக்கைக்குள் ஆயத்தமாக வைத்திருந்த அரிவாளை எடுத்துத் தன் தலையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டித்துக் கொண்டாள். குழந்தை இதை அறிந்து கொள்ளவில்லை. மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிருந்தது. நள்ளிரவில் பிணத்தின் மீதிருந்து மந்திரத்தை ஜெபித்ததால் கலைமகள் அன்னவாஹனத்தில் தோன்றி ஆயிரம் சந்திரோதயம் போல் காட்சி அளித்தாள்.

அந்த அருள் ஒளியில் வாணிதேவியை குழந்தை தரிசித்தது. அதே நேரத்தில் தன்னைப் பெற்றெடுத்த அன்னை மாண்டிருக்கக் கண்டது. இந்தத் தாயை நோக்கி அழுவதா? அந்தத் தாயை நோக்கித் தொழுவதா? என்று எண்ணித் திகைத்தது.

கலைமகள் அக்குழந்தைக்குப் பூர்ணமான அருளை வழங்கி கலைஞானத்தைத் தந்தருளினாள். ஸ்ரீஹர்ஷன் கலை மகளை நோக்கி ''அம்மா! என்தாய் பிழைக்க அருள்செய்'' என்று தொழுது அழுது வேண்டினான். வாணிதேவி அருள்புரிந்தாள். மாமல்லதேவி உயிர் பெற்று எழுந்தாள்.

ஸ்ரீஹர்ஷன் வடமொழியில் பெரும்புலவராக விளங்கினார். இவர் நளனுடைய சரித்திரத்தை 'நைஷதம்' என்ற நூலாகப்பாடினார். அது மிகவும் கடினமாக எளிதில் பொருள் விளங்காதபடி இருந்தது. அக் காலத்திலிருந்த புலவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஸ்ரீஹர்ஷனுடைய அறிவு மிகவும் கூர்மையாக இருந்தது. அவரால் எளிமையாகப் பாட இயலவில்லை. புலவர்கள் அவரைப் பார்த்துத் ''தங்களுடைய அறிவின் கூர்மை சிறிது மழுங்க வேண்டும். அப்படி மழுங்குவதற்கு நீர் திருமணம் செய்து கொள்ளவேண்டும். மாமனார் வீட்டில் சில காலம் இருக்க வேண்டும். காலையில் எருமைத்தயிர் அன்னம் சாப்பிட வேண்டும். அவரைப் பந்தலின் கீழ் இருக்கவேண்டும்'' என்று கூறினார்கள்.

ஸ்ரீஹர்ஷன் இவற்றை இவ்வாறு செய்து அறிவின் கூர்மையை மழுக்கிக் கொண்டு இரண்டாவது முறையாக நைஷதத்தைப் பாடினார். அப்படிப் பாடிய நைஷதமே மிகவுயர்ந்த காவியமாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது. ''நைஷதம் புலவருக்கு ஔஷதம்'' என்று பழமொழி.

தன் மகனுக்காக தன்னையே தியாகம் செய்த தாயின் இவ் வரலாற்றினால் தாயன்பு நன்கு புலனாகின்றதல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை.

தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்கதோர் மந்திரமுமில்லை.

தாரமிழந்தால் மறுதாரம்
தாயையிழந்தால் இல்லைப் பரிகாரம்.

தனயனுக்கோ இது பெரும் சேதம்
தரணியில் உண்டோ இதனிலும் சோகம்.

அன்பிலே அவள் ஓர் அன்னை
பண்போடு வளர்த்து ஆளாக்கினாள் என்னை.

கண் இமைக்கும் நேரத்தில் அடைந்தனள் விண்ணை
இனி நினையாள் அவள் பிறவியாம் மண்ணை.

திரைகடல் ஓடி திரவியம் தேடப்
போன என்னைப் பிரித்தது தூரம்.
அதனால்,
அன்றாடப் பணிவிடை அன்னைக்கு என்னால்
ஆற்ற முடியாமல் போனதே.

உடன் இருந்திருந்தால் - பெற்ற
கடன் சிறப்புறத் தீர்த்திருப்பேன்;
நின்னுயிரை என்னுயிராய்
பேணியிருப்பேன்.

தாயே! கடல் நீரில் கருவெடுத்து
உருவெடுத்த மேகம் போல்,
உன் ஊனில் உயிர் வளர்த்து
உடல் வளர்த்த என்னை
தேய் நிலவாய் நீயிருந்து
தேற்றிய நாட்களெல்லாம்
அலையாய் எழுந்து வந்து
என் நெஞ்சைத் தாக்குதம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமாய் நீ இருந்தாய்
பயிராய் நான் வளர்ந்தேன்;

கடலாய் நீ விரிந்தாய்
கடிதில் கரை சேர்ந்தேன்;

என்னைப்போல்
எனது சகோதர சகோதரிகள்
அறுவரையும்
அமுதும் அறிவும் ஊட்டி
வையத்துள் வாழ்வாங்கு
வாழவைத்தாய்.

அதேவேளை
எமக்குத் தெய்வமான நீ
இல்லறத்தோடு இறையறத்தைப்
பேணுவதிலும் உறுதியாய் நின்றாய்.

அவனருளாலே அவன்தாள் வணங்கும்
சிவபூசை நெறியே
உன்வாழ்வாக மாறிற்று.
இறையடி எய்தலே
உன்விருப்பும் ஆயிற்று.

ஆயினும்,
உனைப் பிரிந்த எம் உணர்வு
அலையிடைப்பட்ட துரும்பென
எம்மை ஆக்கும்.

நீ ஊட்டிய அறிவும்
நீ கனிந்தளித்த தாய்மை அன்பும்
எமக்கு உறுதி தந்து
எம்மை வழி நடத்தும்.

*என்றும் உன் நினைவுடன்*
*அரபு நாட்டில் வாழும்*
*அன்பு மகன்*
*சி. நடராசா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறி நின்ற சீலவாழ்வு

இவ்வையகத்தே மானிடராய்ப் பிறப்பது அரிது. அதிலும் இந்துக்களாய் உதித்து சைவாசார அநுஷ்டான விதிகளுக்கேற்ப ஒழுகி தம் வாழ்க்கையை அமைத்து சைவநெறிப் பற்றுடன் வாழ்ந்தவர் அரிதினும் அரிதே.

அப்பேர்ப்பட்ட அப்பழுக்கற்ற முழுமையான சைவசீலராய் சைவநெறி தவறாது முதிர்ந்த கல்வியறிவு பெற்று யாவரும் வாழ்த்த வியத்தகு முறையில் தன்வாழ்க்கையை நெறிப்படுத்தி தெய்வ கடாட்சம் பெற்று வாழ்ந்து இவ் வருட பங்குனிமாத பூரண ஏகாதசி திதி தனில் சிவபதமடைந்தவர் திருமதி இலக்குமி அம்மா சின்னையா ஆவார்.

1904ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை சித்திரை நட்சத்திரத்திலன்று கரவெட்டியில் கணபதிப்பிள்ளை ஆறுமுகம் - பார்வதி அம்மாள் தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வியாகப் பிறந்தார். அவருடன் உடன் பிறந்த சகோதரர்களாகிய பொன்னையா, இராசம்மா, செல்லமுத்து, கந்தப்பு ஆகியோர் இவருக்கு முன்னமேயே இறைவனடி சென்றிருக்க, இவர் நீண்டகாலமாக தான் பிறந்த நாள் முதல் கடுமையாகக் கடைப்பிடித்து வந்த அரும்பெரும் சைவாசாரக் கொள்கைகளை உறுதியுடன் கடைசி மூச்சு வரை கடைப்பிடித்து தனது தொண்ணூற்றி மூன்றாவது முதிர்ச்சி பெற்ற வயதில் சிவனடி எய்தினார்.

அறியாப்பருவத்திலிருந்தே கரவெட்டியில் அந்திரான் முருகன் கோயில், கிராய்ப் பிள்ளையார் கோயில், அத்துளு அம்மன் கோயில் ஆகிய திருத்தலங்களில் அருந் தொண்டுகளை மிகுந்த தெய்வ பக்தியுடன் ஆற்றி, சிறு பராயத்தில் தான் பிறந்த இடத்திலேயே கல்வி கற்ற போதும் பின் உயர்படிப்புக்காக மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் படித்தபோதும், பின் திருமணமாகி இல்லறத்தில் ஈடுபட்ட போதும், தன் ஆசிரியத் தொழிலில் கடமையுணர்ச்சியுடன் முற்றாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த போதும், பின் ஓய்வு பெற்று பிறந்தகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த சமயத்திலும் தன் உறுதியான சைவநெறி தளரா நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து இரண்டாம் சிவதீட்சையும் பெற்று எவரும் எந்நேரமும் போற்றத்தக்க வண்ணம் சைவப்பழமாகவே திகழ்ந்தார்.

சிறுவயதில், கரவெட்டியில் சித்தமணியம் என்னும் பெரியாரினால் ஸ்தாபிக்கப்பட்ட பெண்கள் பாடசாலையில் கல்வி பயின்றார். அவரது ஆசிரியர்கள் வியக்கத்தக்க முறையில் எல்லா வகுப்புகளிலும் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதனா மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி
## பயிற்சி பெற்ற ஆசிரியர் குழு - 1928



இப்புகைப்படத்தில் அமர்ந்திருக்கும் லேடி இராமநாதன், சேர் பொன். இராமநாதன், பாடசாலை அதிபர் ஆகியோரின் பின்னால் நிற்பவர்களில் முதல் வரிசையில் இடமிருந்து வலம் ஐந்தாவதாக நிற்பவர் திருமதி சின்னையா இலக்குமி அம்மா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக மாணாக்கர்களிலும் பார்க்க மிகத் திறமையாக படிப்பில் முன்னின்றார். இவரது ஆற்றலைக் கண்டு அவ்வூர்ப் பெரியார்கள் இவரை மேற்படிப்புக்காக இராமநாதன் கல்லூரிக்குச் சென்று கல்வி பயில வழிவகுத்துக் கொடுத்தனர்.

சைவப்பண்புடன் வாழ்ந்து கல்வியறிவிலும் முன்னேற்றமடைந்து வந்த தம் மகளை நினைத்துப் பெற்றோர் புளகாங்கிதம் அடைந்தனர். ''எனக்கு நீ மகளாக வந்தது நான் செய்த தவப்பயனே'' எனத் தந்தையார் எப்போதும் கூறுவார். மழலைப் பருவத்தில் அன்னையின் மடியில் இருந்த சமயம் முறிந்த பனைமரம் ஒன்று தாக்கியபோது தனது அன்னையைப் பறிகொடுத்த இவரது தாயார், ''என்னைத் தெய்வம் காத்தது பெருமை தரும் உன்னைப் பெற்றெடுக்க அல்லவா'' என்று வாஞ்ஞையுடன் கூறுவார்.

கடவுள் அருள் வேண்டி தெய்வ வழிபாட்டுடன் வாழ்ந்து கல்வி பயின்று தன் நிலையை ஓரளவு ஸ்திரப்படுத்திக் கொண்டாலும் தன் சகோதரர்களும் தன்னைப்போன்று கல்வியில் முன்னிற்க வேண்டும் என்ற தீவிர எண்ணத்துடன் எப்போதும் அவர்களுக்கும் அறிவுரைகள் கூறி கல்வி புகட்டிய வண்ணமே இருந்தார்.

சேர் பொன்னம்பலம் இராமநாதனும் லேடி இராமநாதனும் இவர் கொண்டொழுகும் சீரிய சைவப் பழக்கவழக்கங்கள் பற்றிக் கேள்வியுற்று அப்பேர்ப்பட்ட ஒருவர் தம் கல்லூரியில் மேற்படிப்புக்கு வந்தமையையிட்டு பெருமையுற்று இவருக்கெனத் தனியறை ஒன்றினை ஒதுக்கிக் கொடுத்து தான் கிரமமாகச் செய்யும் சிவபூசையைத் தொடர்ந்து செய்வதற்கும் தன் உணவைத் தானே சமையல் செய்வதற்கும் பல வழிகளிலும் உதவியாக இருந்தனர். கல்லூரியில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி நெறிப் படிப்பை சிறப்பாகக் கற்று முடித்து 1928ஆம் ஆண்டு வெளியேறிய சமயம் மாணாக்கர் குழுவினருடன் ஒன்றாகப் படம் எடுத்த போது சேர் பொன்னம்பலம் இராமநாதன் தன் விருப்பத்துக்குரிய மாணவி இலக்குமி அம்மாவைத் தன் அருகிலேயே நிற்க வைத்துப் படம் எடுத்து மகிழ்ந்தார். இந்தப் புகைப்படம் இவ்வஞ்சலி மலரில் இணைக்கப்பட்டுள்ளது.

இவரை நிரந்தரமாகத் தனது கல்லூரியிலேயே ஆசிரியையாக நியமிக்க சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் விரும்பிய போதும் இல்லறத்தில் இணைய வேண்டிய விதிவசத்தால் இவர் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போதே இவரது சகல அம்சங்களுக்கும் ஏற்ப அப்போது கல்வி இலாகாவில் சிரேஷ்ட பரிசோதகராக இருந்த திரு. இராசசிங்கம் அவர்கள் தம் பாரியார் உதவியுடன் தனது சீனி உடையார் வழித்தோன்றலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சீலனாய் சைவப்பண்புடன் மிளிர்ந்து தலைமையாசிரியராய்ப் பணியாற்றிக் கொண்டிருந்தவருமான கரவெட்டியைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பியார் ஏரம்பு சின்னையா அவர்களைத் தேர்ந்தெடுத்து உடன் மணம் முடித்து வைக்க விரும்பிய போதும், தான் பயின்று வந்த கல்விநெறி நிறைவேறும் வரை கல்வியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த இலக்குமி அம்மா மனம் ஒப்பவில்லை. ஆனால் கல்வி நிறைவெய்தியதும் 1928ஆம் ஆண்டு திரு. இராசசிங்கம் தம்பதிகளின் நன்முயற்சியால் இவரது திருமணம் இனிதே நிறைவேறியது. அவ்வமயம் லேடி இராமநாதனும் தன் மகளுக்கென இந்தியாவிலிருந்து வாங்கி வைத்திருந்த விலையுயர்ந்த கூறைச் சேலையைப் பரிசளித்து உளம் மகிழந்தார்.

சங்கீதத்திலும் சமையற்கலையிலும் மிகத் தேர்ச்சி பெற்று ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றிய 36வருட சேவைக்காலத்தில் பாணந்துறை, நெல்லியடி, நவாலி, மன்னார், மாறாசேன, கண்டி, கொழும்பு, மீண்டும் நெல்லியடி ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்குக் கல்வியறிவூட்டினார். பிரபல வழக்கறிஞர் கே. சி. நடராசாவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். சிவசிதம்பரமும் இவரிடம் தம் ஆரம்ப காலத்தில் கல்வி பயின்றவர்களாவர்.

வாழ்க்கையில் சைவத்தில் ஊறித்திளைத்திருந்தாலும் விடா முயற்சியும் கடின உழைப்புமே நிச்சயம் வெற்றியைக் கொடுக்கும் என்னும் மூதறிஞர் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டினார்.

எண்மரைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்த சின்னையா - இலக்குமி அம்மா தம்பதிகள் தம் மகள் ஒருவரை 1944ஆம் ஆண்டு மன்னாரில் மலேரியா நோய்க்கு பறிகொடுக்க நேர்ந்ததெனினும் மற்றைய ஏழு பிள்ளைகளையும் மிகுந்த பாசத்துடன் சைவப்பண்புடன் வளர்த்து கல்வியறிவூட்டி நல்ல நிலையை அடையச் செய்தனர். 1951ஆம் ஆண்டு தம் சிரேஷ்ட புத்திரன் சிவராசா இங்கிலாந்து சென்று அங்கேயே தங்கிட நேர்ந்திடினும் மனம் தளராது உறுதியுடன் நிதானமாக வாழ்ந்து பிள்ளைகள் தம் சைவப்பண்புக்கு இசைய நல்வாழ்வு பெற இறைவனை வேண்டினர்.

1972ஆம் ஆண்டு தனது கணவர் சிவபதம் அடையும் முன் தன் சொந்த முயற்சியின் நிமித்தம் தானே முன்நின்று சைவாசார ஒழுக்கமிக்க சாவகச்சேரி சரசாலையைச் சேர்ந்த வழக்கறிஞர் கதிர்காமசேகரர் குடும்பத்திலிருந்து தாட்சாயினியையும் பொறியியலாளர் சங்கரப் பிள்ளையையும் மருமக்களாகத் தேர்ந்தெடுத்து தம்பிள்ளைகள் இராசதுரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலேஸ்வரிக்கும் மணம் முடித்து வைத்தார். பின் தன் வாழ்க்கைத் துணைவர் அற்ற பின்னும் ஏனைய பிள்ளைகளுக்கு முறையே கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நவாலியைச் சேர்ந்த சோமசுந்தரம் ( மஸ்கன்ஸ்) தம்பதிகள் மகள் சோதிநாயகியையும் (அதிபர், விவேகானந்தக் கல்லூரி, கொழும்பு), உடுப்பிட்டி தாமோதர விதானை தம்பதியர் மகள் வள்ளி அம்மையையும், புலோலி சிவராமலிங்கம் தம்பதிகள் மகன் டாக்டர் பாலகிருஷ்ணனையும், கரவெட்டி இளைப்பாறிய ஆசிரியர் மயில்வாகனம் தம்பதிகளின் மகள் மகேஸ்வரியையும் மருமக்களாகத் தேர்ந்து திருமணங்கள் செய்து வைத்துப் பூரிப்படைந்தார்.

தன்மகள் நகுலேஸ்வரி (ராணி) சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெற்றமையையிட்டும், சைவவழி நின்று அவர் சுலோகங்கள் ஓதி வழிபடும்போது கேட்டும் பெருமையும் பேரின்பமும் அடைவார்.

தன்வீடு, தன்செல்வம் எல்லாம் தூய்மையாகச் சிவபூசை செய்து தான் ஆன்ம ஈடேற்றம் அடைவதற்காகச் சிவபெருமான் தந்தது என்ற பற்றோடு தன்பிறப்பிடத்திலேயே இறுதிவரை அவர் வாழ விரும்பியும் உடல் நலிவு காரணமாக பிள்ளைகள் மிகுந்த சிரமங்கள் மத்தியில் 1993ஆம் ஆண்டு அவரைக் கொழும்புக்குக் கொண்டு வந்தனர். இதன் பயனாய் அவரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் அனைவரும் அவருடன் சிலகாலம் மனம் குளிர குலவியிருக்க அருள் கிட்டிற்று.

கொழும்பில் மருமகள் சோதிநாயகியின் பராமரிப்பில் அவரது சைவ ஆசார அநுஷ்டானங்களைப் பேணி வாழ்ந்து வெளிநாட்டில் வாழுகின்ற தனது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மட்டுமன்றி அனைவரதும் நல்வாழ்வு வேண்டி ஆசிகள் வழங்கிய வண்ணமேயிருந்தார்.

தனது இறுதிநாட்களில் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சூழந்து நின்று சிவநாமம் இசைக்க நகுலேஸ்வர (கீரிமலை) ஆதீன முதல்வர் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அன்னையாருக்கு மூல மந்திரம் ஓதி கங்கா தீர்த்தம் பருக்கியபின் சிறிது நேரத்தில் சிவ நினைவாகவே ஏகாதசித் திதியில் 1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சிவபதம் அடைந்தார்.

வெள்ளிக்கிழமையில் பிறந்து, வெள்ளிக்கிழமையில் ருதுவாகி, வெள்ளிக்கிழமையில் திருமணமாகி, வெள்ளிக்கிழமையிலன்றே அன்னையார் இலக்குமி அம்மா தன் கணவரைப்போலவே சைவப்பழமாக வாழ்ந்து மாந்தருள் மாணிக்கமாகத் திகழ்ந்து மகிமைமிக்க ஏகாதசித் திதியிலேயே சிவசாரூப்பியம் எய்தினர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்

எமது குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய
எம் கண் கண்ட தெய்வம்
எம் அன்புமிகு அன்னை
***திருவாட்டி சின்னையா இலக்குமி அம்மா அவர்கள்***
சிவபதமெய்திய செய்தி கேட்டு
நேரில் வருகை தந்தும்,
மலர்வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும்,
பல்வேறு வகைகளில் உதவியும் ஒத்தாசைபுரிந்தும்
எமது ஆழ்ந்த துயரத்தில் பங்கு கொண்டு
எமக்கு ஆறுதல் அளித்த
உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும்
இன்றைய அந்தியேஷ்டி ஆராதனையில்
கலந்துகொண்டோருக்கும்
**எமது வணக்கத்துடன்**
**இதயபூர்வமான நன்றியை**
**பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

இங்ஙனம்
*மக்கள், மருமக்கள்*
*பேரப்பிள்ளைகள்*
*பூட்டப்பிள்ளைகள்*
*மற்றும் குடும்ப உறுப்பினர்கள்.*

---

*222/14, பண்டாரநாயக்க மாவத்தை*
*கொழும்பு 12*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

சின்னத்தம்பியார் ஏரம்பு
+
காயத்திரி அம்மாள்

சின்னையா

கணபதிப்பிள்ளை
+
பார்வதி அம்

இலக்குமி அ

சிவராசா
+
பட்றீசியா

றீட்டா
+
ஸ்றீவ்

ஏட்றியன்
அலெக்ஸ்

மார்க்

இராசதுரை
+
தாட்சாயினி

கேதாரகௌரி
கௌரீசன்

பாலசுந்தரம்
+
சோதிநாயகி

தேவசேனாதிபதி
உமாபதி
தயாபதி

கனகசுந்தரம்
+
வள்ளி அம்மை

தேவ் கணேஷ்

நகுலேஸ்
+
சங்கரப்பிள்

நீரஜ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

யார் ஏரம்பு

+

அம்மாள்

யா

கணபதிப்பிள்ளை ஆறுமுகம்

+

பார்வதி அம்மாள்

இலக்குமி அம்மா

லசுந்தரம்
+
திநாயகி
சேனாதிபதி
மாபதி
யாபதி

கனகசுந்தரம்
+
வள்ளி அம்மை
தேவ் கணேஷ்

நகுலேஸ்வரி
+
சங்கரப்பிள்ளை
நீரஜா

மங்களேஸ்வரி
+
பாலகிருஷ்ணன்
ஆஷா

நடராசா
+
மகேஸ்வரி
சிவானந்தன்
சிவாங்கதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமைப்பு
லக்ஷ்மி ஹரா
309, செட்டியார் தெரு, கொழும்பு 11
தொலைபேசி : 341582

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org